2012 ஏப்ரல் 4]

நடப்பாண்டு திட்ட இலக்கில் சேர்க்கப்பட்டு, ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

45—

கால்நடைக் கிளை மருத்துவமனை

***5619—திரு. செ. பெருமாள்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதி, பாப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு குறைந்தபட்சம் அந்தக் கிராமத்திலிருந்து சுற்றுப்புறக் கிராமங்கள் வரை 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும் என்ற விதியும், 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாக வேறு கிளை நிலையம் இருக்கக் கூடாது என்ற விதியும் உள்ளது. அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட பெத்தநாயக்கன்பாளையம், பாப்பநாயக்கன்பட்டி கிராமங்களிலே 1,300 கால்நடைகள் மட்டுமே உள்ளன. எனவே, அங்கு கிளை நிலையம் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வருங்காலங்களில் அங்கு கால்நடைகள் எண்ணிக்கை 3,000 ஆக உயரும்பட்சத்தில் நிச்சயமாக மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் அம்மாவின் அரசு கேட்காமலேயே மக்களுடைய தேவைகளை தாயுள்ளத்தோடு நிறைவேற்றி வருகிறது. எனது தொகுதியான ஏற்காடு தொகுதியிலே, பாப்பநாயக்கன்பட்டி, வீமுன்பாலம், ஏழுபுளி, ஆத்தலூர், மேட்டுக்காடு, அரசநத்தம், சின்னமலப்பாடி, பெரியமலப்பாடி ஆகிய 8 கிராமங்கள் அடங்கியுள்ளன. கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டி 10 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதால், அப்பகுதியினுடைய மக்கள் சிரமப்படுகிறார்கள். கால்நடைகளைப் பராமரிக்க வேண்டி, பாப்பநாயக்கன்பட்டியில் ஒரு கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க வேண்டி, மறுபரிசீலனை செய்து அந்த மலைவாழ் மக்களுடைய குறைகளை நீக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளின்படி மேற்படி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அதற்கு வாய்ப்பு இருந்தால் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

46—

தாவரக் கழிவிலிருந்து மின் உற்பத்தி

***6932—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—